பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
The EELA NADU

மலர்: 19 ஐப்பசி 1 ஜுல்ஹ: 3 இதழ் 247
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 17-10-77

## பாதிக்கப்பட்ட டாக்டர்கள் ஒய்வுபெறுவதற்கு மகஜர்

யாழ்ப்பாணம், திங்கள்
கண்டி, அநுராதபுரம், குருநாகல் ஆகிய பகுதிகளில் கடமையாற்றிய டாக்டர்களில் தகுந்த இடமாற்றம் கிடைக்காத பாதிக்கப்பட்ட டாக்டர்களும உதவி டாக்டர்களும் நேற்று பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் கழகத்தின் அலுவலகத்தில் சந்தித்தனர்.

தங்களுக்கு தகுதியான இடத்துக்கு மாற்றம் கிடைக்காததால் தங்கள் சேவையிலிருந்து இளைப்பாறுவதற்கு அனுமதியளிக்குமாறு பிரதமருக்கு ஒரு மகஜர் அனுப்புவதென்று அவர்கள் நீர்மானித்தனர்.

இந்த மகஜரில் அவர்கள் கைச்சாத்திட்டனர். மற்றவர்களும் இன்று கைவெழுத்து வைத்தபின் மகஜரைப் பிரதமருக்கு அனுப்புவதென்று தீர்மானிக்கப்பட்டது.

இதேசமயம் பாதிக்கப்பட்ட டாக்டர்கள் கனடாவில் குடியேறுவதற்கு விருப்பம் தெரிவித்து எழுதிய கடிதத்துக்கு இலங்கையிலுள்ள கனடியத் தூதரகம் எழுதியுள்ள பதிலில் தனிப்பட்ட முறையில் விண்ணப்பிக்கவேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வி.பி. தலைமையில்
# புதிய கம்யூ. கட்சி!
## இவ்வாரம் விபரம் வெளிவரும்

யாழ்ப்பாணம், திங்கள்
வடபகுதியின் பிரபல கம்யூனிஸ்ட் திரு வி பொன்னம்பலம் மாஸ்கோ சார்பு இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சியிலிருந்து விலகுவாரென்றும் அவருடன் மற்றும் சிலரும் சேர்ந்து புதிய கம்யூனிஸ்ட்கட்சியொன்றை ஆரம்பிக்கத்திட்டமிட்டிருப்பதாகவும் இப்போது ஊர்ஜிதமாகியிருக்கிறது.

இனியும் எதையும் ஒளித்து மறைத்து வைத்திருப்பதற்கு எதுவுமில்லையென்றும்உண்மை நிலையை நாட்டுக்கும் மக்களுக்கும் விளக்கிப் படவுள்ள காரியங்களில் இறங்க வேண்டிய காலம் வந்துவிட்டதென்றும் திரு. வி. பொன்னம்பலம் தமது சகாக்களிடம் கூறியதாக அறியப்படுகிறது.

திரு. வி. பி. யின் புதியதிட்டங்கள் பற்றி ஏ வ ரே இன் வாரத்துக்குள் விளக்கமான அறிக்கையொன்றை வெளியிடுவாரென்று எதிர்பார்க்கப் படுகிறது.

## யாழ். நகர் துப்பாக்கிச் சூடு
# $1\frac{1}{2}$ லட்சம் நஷ்டஈடு கோரி நோட்டீஸ்

யாழ்ப்பாணம், திங்கள்
சமீபத்திய கலவரத்தின் போது யாழ்ப்பாணத்தில் துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியான இருவரின் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அட்டர்ணி ஜெனரலிடமும் பொலிஸ் அதிகாரிகளிடமும் ஒன்றரைலட்சம் ரூபாய் நஷ்டஈடு கோரி சட்டத்தரணி மூலம் நோட்டீஸ் பிறப்பித்துள்ளனர்.

நீதிநிர்வாகச் சட்டத்தின் கீழ் இந்த நோட்டீஸ்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தம்மையும் ஐந்துபிள்ளைகளையும் பராமரிக்கஇருந்த ஆனந்தவேல் மாண்டதால் நஷ்டஈடாக தங்களுக்கு ஐம்பதினாயிரம் ரூபாய் வழங்கவேண்டுமென்று சட்டத்தரணி திரு ஆர். பாலசுப்பிரமணியம்மூலம் நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கஸ்தூரியார் வீதியில் காலமானபாக்கியராஜாவின் தந்தை ஒரு லட்சம் ரூபாய் நஷ்டஈடு கோரி அட்டர்ணி ஜெனரல் மீதும் உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் மீதும் மற்றும் ஐந்து பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மீதும் நோட்டீஸ் பிறப்பித்துள்ளார்.

## கோதுமை மா இறக்குமதி!

(கொழும்பு)
அரசாங்கம் பெருந்தொகையான கோதுமைமாவு இறக்குமதிசெய்யவுள்ளது. ஏற்கனவே கேள்விப்பத்திரங்கள் மூலம் கோரியதையடுத்து 1,50,000 தொன் கோதுமை மாவை கொள்முதல் செய்துள்ளன.

இறக்குமதி செய்யப்படவுள்ள மாவுக்கு, ஒருதொன்னுக்கு 163 பவுண் செலுத்தப்பட்டதாக உணவுகட்டுப்பாட்டு அதிகாரி [illegible] விட்டுள்ளார். இத்தொகை உலகசந்தையில் கோதுமையின் விலை 10 பவுண் அதிகரித்துள்ளதை தெரிவிக்கின்றன.

கைதடி வங்கிக் கொள்ளை:
## எவரும் கைதாகவில்லை சிலர் விசாரணை

யாழ்ப்பாணம், திங்கள்
கைதடி இலங்கை வங்கிக்கிளைக் கொள்ளை தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. கொள்ளையடிக்கப்பட்ட பணமும் மீட்கப் படவில்லை.

இக்கொள்ளை தொடர்பாக இளைஞர்கள் சிலரைப் பொலிசார் விசாரணைக்குட்படுத்திய போதும் எவரையும் இதுவரை கைதுசெய்யவில்லை. தொடர்ந்து புலன் விசாரணைகளில் பொலிசார் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை கைதடி இலங்கை வங்கிக்கிளையில் ருபா பத்தாயிரம் சைக்கிளில் வந்த இளைஞர் சிலரால் கொள்ளையடிக்கப்பட்டது தெரிந்ததே.

## அரசின் உதவியின்றியே முகாம்களை நடத்துவோம்
### —கே. சி. நித்தியானந்தா

கொழும்பு, ஞாயிறு
"நாடெங்கிலும் இயங்கி வரும் அகதிகள் முகாம்கள் எம்முடையவை. அவற்றை மூடிவிட்டு அங்குள்ளவர்களை அநாதைகளாக்கும் நடவடிக்கைக்கு இடமளிக்கமாட்டோம்".

இவ்வாறு பாதிக்கப்பட்ட தமிழர் மறுவாழ்வுக்கழகத்தின் தலைவர் திரு. கே. சி. நித்தியானந்தா நேற்று நடைபெற்ற செய்தி நிருபர்கள்மகாநாட்டில் தெரிவித்தார்.

சமூகசேவைகள் அமைச்சர் திரு. அசோகா கருணரத்தின, பொலிஸ், இராணுவத்தினரின் உதவியுடன் அகதிகள் முகாம்களை மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிட்ட திரு. நித்தியானந்தா இவ்வாறு கூறினர்.

நாடெங்கிலும் தற்போது உள்ள அகதிகள் அனைத்தும் தொண்டர்களாலேயே ஆரம்பிக்கப்பட்டன. பின்னர் அரசு சில உதவிகளை இம்முகாம்களுக்கு அளித்தது. அரசு வேண்டுமானல் தனது உதவிகளை நிறுத்திக் கொள்ளட்டும். ஆனல் அகதிகளுக்கானபுனர்வாழ்வைஏற்படுத்தப்படும்வரை இம்முகாம்கள் பொதுமக்களின் ஆதரவுடன் நாம் தொடர்ந்து நடாத்துவோம் என்று திரு. நித்தியானந்தா தெரிவித்தார்.

அகதிகள் மறுவாழ்வு பற்றி மிகவிரைவில் தாம் அறிவிப்பாரென்றும் திரு. நித்தியானந்தா மேலும் தெரிவித்தார். (ம)

## சைக்கிள் திருடினராம்; மாட்டுவண்டியில் ஊர்வலம்!

யாழ்ப்பாணம், திங்கள்
சைக்கிள் திருடிய ஒருவர் சைக்கிளுடன் மாட்டுவண்டியில் ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டார்.

யாழ்ப்பாண நகர வீதிகளில் இந்த ஊர்வலம் நேற்று மாலை நடைபெற்றது.

நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் தனது சைக்கிளைப் பறிகொடுத்த ஒருவர், அதே சைக்கிளில் நேற்று கே. கே. எஸ். வீதியால் வந்தவரை யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் வைத்துப் பொதுமக்களின் உதவியுடன் துரத்திப்பிடித்தார். சைக்கிளில் வந்தவரைப் பின்னர் சைக்கிளுடன் மாட்டுவண்டியில் ஏற்றி, நகரின் வீதிகளினூடாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு ஊர்வலமாக கொண்டுசென்றனர். (வவனியா நிரு.)

# கடத்தல் விமானம் எங்கு போகிறது?

லண்டன், அக். 16
நான்கு பயங்கரவாதிகளால் கடத்தப்பட்டுள்ள மேற்கு ஜெர்மன் விமானம், டுபாயிலிருந்து பெயர்குறிப்பிடப்படாத இடத்துக்கு புறப்பட்டுள்ளது.

கடத்தல்காரர் மேற்கு ஜெர்மனியில் சிறைவைக்கப்பட்டுள்ள டைகர் குறூப் என்ற ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தைச் சேர்ந்த 11பேரையும் விடுதலை செய்யுமாறும் 1 கோடியே 50லட்சம்டொலர் தமக்குச் செலுத்த வேண்டும் என்று விதிக்கப்பட்ட காலக்கெடு முடிவடைந்ததால் விமானம் டுபாயிலிருந்து பெயர் குறிப்பிடப்படாத இடத்துக்கு செலுத்தப்பட்டுள்ளது.

விமானத்தில் உள்ள கைத்தொழில் அதிபர் உட்பட, குழந்தைகள் நோயாளிகளின் உயிர்களுக்கு பங்கம் விளைவிக்கவேண்டாமென கடத்தல்காரரிடம் டுபாய் மனிதசங்கம் கோரியுள்ளது. தற்போது விமானம் ஓமானின் சலாலா விமானத்தளத்துக்கு மேலாக பறப்பதாகத் தெரியவந்துள்ளது. விமானம் எங்கு இறக்கப்பட்டுள்ளது என்பது பற்றி செய்தி அச்சுக்குப் போகும்வரை தெரியவில்லை.

## இராணுவம் சோதனை

நீர்வேலி, ஞாயிறு
வடபகுதியில் நிலவிவரும் கொள்ளைமுயற்சிகள் காரணமாக கோப்பாய், நீர்வேலி, புத்தூர், அச்சுவேலி ஆகிய பகுதிகளில் இராணுவத்தினர் வாகனங்களை நிறுத்தி பலத்த சோதனையிட்டு வருகின்றனர். (அ)

## இன்று இசைவிருந்து

யாழ்ப்பாணம், திங்கள்
ஈழத்தின் பிரபல பாடகி திருமதி சத்தியபாமா ராஜலிங்கத்தின் மாணவிகள் இன்று மாலை 6-30 மணிக்கு யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் இன்னிசை விருந்தளிக்கவிருக்கிருர்கள்.

## நவம் யாழ். திரும்பினர்

யாழ்ப்பாணம், திங்கள்
சோபியாவில் நடைபெற்ற அனைத்துலகப் பாராளுமன்ற மாநாட்டில் கலந்துகொண்ட சாவகச்சேரிப் பிரதிநிதியும் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகருமான திரு. வி. என். நவரத்தினம் நேற்று யாழ்ப்பாணம் திரும்பினர்.

நேற்று மாலை அவர் கைதடி ஆயுர்வேதக் கல்லூரிக் கட்டிடத்திலுள்ள அகதிகள் முகாமுக்குச் சென்று பார்வையிட்டதுடன் அகதிகளின் குறைகளையும் கேட்டறிந்தார்.

## குழந்தைகளுக்கு நோய் தடுப்பு

கொழும்பு ஞாயிறு
தொற்று நோய்களிலிருந்து குழந்தைகளுக்கு பூரண பாதுகாப்பு அளிப்பதற்கான திட்டமொன்றுக்குரிய ஏற்பாடுகளை சுகாதார அமைச்சர் திரு. காமினி ஜயசூரிய மேற்கொண்டுள்ளார்.

குழந்தைகள் பிறந்த ஒரு வருடகாலத்துள் நோய்த்தடுப்புக்கான ஊசி மருந்துகள் ஏற்றும் இத்திட்டத்துக்கு உலக சுகாதார நிறுவனமும், ஐ நா. குழந்தைகள் நல ஸ்தாபனமும் உதவவிருக்கின்றன.

இத்திட்டத்தின் மூலம் ஆண்டொன்றுக்கு சுமார் 365 ஆயிரம்குழந்தைகளுக்குஊசிமருந்து ஏற்றப்படும்.

(6ம் பக்கம் பார்க்க)

# “ஐ.தே.க. ஆட்சிக்கு உதவ வெளிநாடுகள் ஆவல்”

## விவசாய அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, ஞாயிறு

திரு.ஜே.ஆர்.ஜெயவர்த்தனு தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்திற்கு உதவுவதற்கு பல வெளிநாடுகளும், சர்வதேச ஸ்தாபனங்களும் ஆவல் கொண்டுள்ளன” என்று விவசாய காணி அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயகா தெரிவித்துள்ளார்.

“நம்நாட்டின் விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பல வெளிநாடுகளும் சர்வதேச ஸ்தாபனங்களும் உதவி வழங்கி வருகின்றன என்று மேலும் கூறிய அமைச்சர், கடந்த இருமாதங்களில் விவசாய அமைச்சருக்கு இயந்திர சாதனங்கள் உட்பட 20 கோடி ரூபா பெறுமதி வாய்ந்த உதவிகளை வெளிநாடுகள் வழங்கியுள்ளன என்றும் தெரிவித்தார். (உ)

## 1000 ரூபா அபராதம்

நாவலப்பிட்டி, ஞாயிறு

பாவனையாளருக்கு நிறை குறைத்து அரிசி வழங்கிய விற்பனையாளர் ஒருவருக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

நாவலப்பிட்டி நீதிமன்றத்தில் நீதிபதி சிறில் பி. குணுக்குமபர முன்னிலையில் இவ்வழக்கு விசாரணை நடைபெற்றது.

இவ்வழக்கில் ஜே. எம். பருக் என்பவர், பாவனையாளர் ஒருவருக்கு 6 ருத்தலுக்குப் பதிலாக 5 ருத்தல் பதினைந்தரை அவுன்ஸ் அரிசி வழங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. (க-அ)

## வரி விளம்பரம்

### தேவை

‘லட்சுமி ஆர்ட் பைண்டேஸ்’சுக்கு புத்தகம் கொப்பி கட்டுவதிலும் புளொக்ஸ் றபர் சீல் செய்வதில் அனுபவம் உடையவர்கள் தேவை. 22-10 77 நேரில் வரவும். மக்கள் சந்தை மேற்குவீதி, 113, பருத்தித்துறை. 7422

ரிங்கர் வேலை, வெல்டிங் வேலை தெரிந்தவர்கள் தேவை. நேரில் வரவும். ராதா மெசின் கம்பனி, 95, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 7424

பண்டத்தரிப்பு செல்வா சினிமாவுக்கு அனுபவமிக்க ஒப்பறேட்டர், மனேஜர் தேவை. படக்கூட்டுத்தாபனத்தில் படம் எடுத்தல்பற்றிய அனுபவம் இருத்தல்வேண்டும். நேரில் தொடர்பு கொள்ளவும். 5, யாழ். வீதி, பலாலி ரேட், யாழ்ப்பாணம். 7428

### விற்பனைக்கு

பெரிய 5 வேப்பம் மரங்கள் விற்பனைக்குண்டு. பெற விரும்புவோர்: த. சுப்பிரமணியம், உரும்பராய் வடக்கு தொடர்புகொள்ளவும். 7404

வெல்டிங் பிளான்ட் மற்றும் கம்மாலைக்குரிய உபகரணங்களுடன் விற்பனைக்குண்டு. கீழ்க்கண்ட விலாசத்தில் தொடர்புகொள்ளவும். உரிமையாளர் S. செல்வராசா, 164, கஸ்தூரியார் ரேட், யாழ்ப்பாணம். 7426

### வகுப்புகள்

வீணை, வயலின், வாய்ப்பாட்டு, மிருதங்கம், நாட்டிய வகுப்புக்கள் தராதரம் பெற்ற ஆசிரியர்களால் நடாத்தப்படுகின்றது. விபரங்கட்கு: விம்ஸ் இசைக் கல்லூரி, 14, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம். 7416

## நகராட்சி மன்றம் சாவகச்சேரி

## ஆதனவரி அறிவித்தல்

1977ம் ஆண்டு 3ம் கந்தாயத்திற்குரிய ஆதனவரி செலுத்துவதற்கு 31-10-1977ம் திகதி வரை காலநீடிப்பு செய்யப்பட்டுள்ளது. ஆகவே நீங்கள் செலுத்த வேண்டிய வரிகளை 31-10-1977ம் திகதி பகல் 12-00 மணிக்கு முன்பாக சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ள வேண்டும். தவறின் ஆதனவரியுடன்பத்து வீதம் பற்றுணைப்பணமும் சேர்த்து அறவிடப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

த. நவரத்தினராசா
விசேட ஆணையாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
14-10-1977. 7418

## நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

தென்மட்டுவில் கலைமகள் சனசமூக நிலைய புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. கே. சிவராஜசேகரம். உபதலைவர் திரு. எம். இராசகோபால், செயலாளர்: திரு. எஸ். பி. கிருஷ்ணன், உபசெயலாளர்: திரு. வி. சுரேஷ், பொருளாளர்: திரு. ரி. சந்திரகுமார், உபபொருளாளர்: திரு. ரி. தருமகுலசிங்கம்.

ஏழு நிர்வாகசபை உறுப்பினரும் தெரிவுசெய்யப்பட்டனர். (சா-உ)

## நவராத்திரி விழாக்கள்

அரியாலை, ஞாயிறு

அரியாலைமேற்கு காந்தி சனசமூக நிலைய பாலர் பாடசாலையில் எதிர்வரும் 20-ம் திகதி நாமகள் விழா விமரிசையாகக் கொண்டாடப்படவுள்ளது.

21-ந் திகதி விஜயதசமியன்று இளம் சிறார்களுக்கு ஏடு துவக்கி வித்தியாரம்பம் செய்யும் வைபவமும் நடைபெறும்.

சுழிபுரம், ஞாயிறு

வடலியடைப்பு கலைவாணி சனசமூக நிலையத்தில் நவராத்திரிவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டுவருகிறது.

பண்ணாகம் ஸ்ரீமுருகன்வாசிகசாலையில் விசேட பூஜை முதலான நிகழ்ச்சிகளுடன் நவராத்திரி விழா நடைபெறுகிறது.

வட்டுக்கோட்டை கிழக்கு துறட்டிப்பனை அம்மன்கோவிலில் கூட்டுப்பிரார்த்தனை. அபிராமியந்தாதி ஓதல் முதலான நிகழ்ச்சிகளுடன் நவராத்திரி விழா கொண்டாடப்படுகிறது.

0 0 0

மாதகல் மேற்கு சனசமூக நிலையத்தில் நவராத்திரி விழா சிறப்பாக நடைபெற்று வருகிறது.

சுழிபுரம் பத்திரகாளி கோவிலில் தினமும் மாலைப்பூஜையை அடுத்து அம்மன் கொலுவீற்றிருக்கும் காட்சியும், விசேட அர்ச்சனைகளும் நவராத்திரி விழாவையொட்டி இடம் பெற்றுவருகின்றன.

வழக்கம்பரை மகாமாரியம்மன் கோயிலில் சமயப்பிரசங்கமும், பூஜைகளும் நவராத்திரியையொட்டி நடைபெறுகின்றன.

வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் வித்தியாசாலையில் விஜயதசமியன்று சமயப்பிரசாரகர் ஆசிரியர் திரு. சி. மருதப்பிள்ளை எழுதிய ‘கந்தரலங்கார விரிவுரை’ நூல் வெளியிடப்படவுள்ளது. (உ-அ)

1973-ம் ஆண்டின்
44-ம் இலக்க
நீதி நிருவாகச்சட்டம்
283-ம் பிரிவின் கீழ்

## இடைக்காலக் கட்டளை

### இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்

சுழிபுரத்தில் இருந்து காலஞ்சென்ற சுப்பிரமணியம் தம்பிநயினர் என்பவரின் ஆதனங்களும் மற்றும் பெறுமதிகளும் சம்பந்தப்பட்டவை.

காலஞ்சென்றவர்

வலயம்: யாழ்ப்பாணம்.
இல: 398.

பண்ணாகம் தெற்கு சுழிபுரத்தில் வசிக்கும் சுப்பிரமணியம் தம்பிநயினர் கைம்பெண் இராசகுமாரி.

விண்ணப்பகாரி

1. தம்பிநயினர் மகள் சியாமளா
2. தம்பிநயினர் மகள் சூரியகுமாரி
3. தம்பிநயினர் மகள் சிவோதினி
   (பராயமற்றவர்கள்)
4. சுப்பிரமணியம் இராசரத்தினமும் எல்லோரும் பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்

1ம், 2ம், 3ம் எதிர்வாதிகள் தங்கள் வழக்குப் பாதுகாவலர் 4ம் எதிர்வாதிமூலம் தெரிபடுகின்றனர்.

எதிர்வாதிகள்

1977ம் ஆண்டு புரட்டாதி மாதம் 1ம் திகதியைக் கொண்ட 283ம் பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் உள்ள கூற்றுக்கள் முதல் தோற்றமளவில் நிரூபிக்கப்பட்டுள்ளனவென திருப்தி அடைந்ததின்பேரில் யாழ்ப்பாணம் நீதிவலயத்தின் தத்துவப்பத்திர அலுவலர் கா. கணபதிப்பிள்ளை ஆகிய நான் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்பேரில்,

1977ம் ஆண்டு கார்த்திகை மாதம் 8ந் திகதி அல்லது அதற்கு முன்பதாக எவராவது ஆட்சேபம் தெரிவித்தாலன்றி மேற்குறித்த 4ம் எதிர்வாதியை மேற்குறித்த 1ம், 2ம், 3ம் எதிர்வாதிகளின் வழக்குப் பாதுகாவலராக இத்தால் நியமிக்கின்றேன். மேலும் மேற்குறித்த காலஞ்சென்றவர் விட்டுச்சென்ற மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்களுக்கும் மற்றும் பெறுமதிகளுக்கும் நிருவாகத் தத்துவப் பத்திரம் பெறுவதற்கு மேற்குறித்த விண்ணப்பகாரியே காலஞ்சென்றவரின் கைம்பெண் என்ற வகையில் உரித்துடையவரென்றும் அவ்வண்ணமே அவருக்கு நிருவாகத் தத்துவப்பத்திரம் வழங்கப்படுகிறதென்றும் இத்தால் கட்டளையிடுகின்றேன்.

ஒப்பம்

கா. கணபதிப்பிள்ளை.
தத்துவப்பத்திர அலுவலர்
1977ம் ஆண்டு புரட்டாதி மாதம் 1ம் திகதி.

தயாரித்தவர்:

அ. சொக்கலிங்கம்,
விண்ணப்பகாரியின் சட்டத்தரணி. 7409

காலியில்

## பிரயாணிகளுடன் மூழ்கவிருந்த கப்பல் மீட்கப்பட்டது

கொழும்பு, ஞாயிறு

காலி துறைமுகத்துக்கு இரண்டரை மைல்களுக்குத் தொலைவில் பெரிய கப்பல் ஒன்று பிரயாணிகளுடன் கடலில் மூழ்கவிருந்த வேளை தெய்வாதீனமாக ஆபத்தினின்றும் காப்பாற்றப்பட்டனர்.

‘ஹொரபண்டில்’ என்ற கப்பல் இக்கப்பலைக் கடலில் தாழ்ந்து போக விடாது மீட்பு வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டது.

தக்கசமயத்தில் இவ்வாபத்து நிலை தெரிவிக்கப்பட்டு உதவி கோரப்படாதிருந்தால் விளைவு விபரீதமாக இருந்திருக்கும் என்று கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

காங்கேசனில்

## கொங்கிறீட் வேலைப்பகுதி மீண்டும் திறக்கப்படும்

### புதிய தலைவர் உறுதி

மாவிட்டபுரம், ஞாயிறு

காங்கேசந்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் பலவருடங்களாக மூடிக்கிடந்த கொங்கிறீட்பகுதி வெகு விரைவில் இயங்கத்தொடங்கும் என இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபன புதிய தலைவர் திரு. அசோகா கருணாரத்ன உறுதியளித்துள்ளார்.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைக்கு விஜயம் செய்து தொழிற்சாலையை சுற்றிப்பார்வையிட்ட புதிய தலைவர் தொழிற்சாலையைச் சேர்ந்த 10 தொழிற்சங்கங்களின் கூட்டுக்குழுவுடன் நடத்திய கலந்துரையாடலின்போதே இவ்வாறு உறுதியளித்தார்.

மேற்படி யூனியன் கூட்டுக்குழு புதிய தலைவரிடம் பல்வேறு கோரிக்கைகளைச் சமர்ப்பித்துக் கலந்துரையாடியது.

அச்சமயம் தொழிலாளர்களது ஓய்வு நன்கொடைவிரைவில் கிடைக்கச்செய்வதாகவும் தொழிற்சாலையில் இரும்புத்தூள் கொள்வனவு, ஜிப்சம் இறக்குமதி, வெள்ளிவிழா ஒழுங்குகள், சிமெந்து விநியோகம் போன்ற விஷயங்களில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் ஊழல்மோசடிகள் குறித்து விசாரணை நடத்துவதாகவும், போசனசாலைச் சீர்கேட்டை ஒழித்து நல்ல நிர்வாகமொன்றின்கீழ் அதை இயங்கச்செய்வதாகவும் தலைவர் உறுதியளித்தார்.

### சிமெந்து விநியோகத்தில் புதிய முறை

இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் கொழும்புத் தலைமையகத்தினால் சிபாரிசு செய்யப்படும் விண்ணப்பங்களுக்கு மட்டுமே இனிமேல் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் சிமெந்து வழங்கப்படும். இம்மாதம் தொடக்கம் சிமெந்து பெற விரும்பும் பாவனையாளர்கள் கொழும்பு சீமெந்துக் கூட்டுத்தாபன தலைமையகத்திற்கே விண்ணப்பங்களை அனுப்பவேண்டும்.

இதுவரை காலமும் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைக்கே பாவனையாளர்கள் தமது விண்ணப்பங்களை அனுப்பிவந்தனர். தொழிற்சாலை நிர்வாகம் அவற்றைப் பரிசீலித்து சிமெந்து வழங்கிவந்தது. (அ)

## நவராத்திரி ‘கரோல்’

அரியாலை, ஞாயிறு

நல்லூர் தெற்கு ஸ்ரீவிக்னேஸ்வர வித்தியாலய மாணவ மாணவிகள் கடந்த வியாழனன்று வீடுதோறும் சென்று சரஸ்வதி தோத்திரங்களைப் பாடினர்.

மேற்படி கல்லூரி அதிபர் திரு. துரைச்சாமியின் தலைமையில் மாணவர் குழுவினர் வீடுகளுக்குச் சென்று பூசைக்கவி பாடி மகிழ்வித்தனர். (அ)

## கலைமன்றம் அமைக்க முயற்சி

யாழ்ப்பாணம், திங்கள்

சாவகச்சேரித் தொகுதியில் பிரதேசக் கலைமன்றம் ஒன்றினை அமைக்க சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். முருகவேள் முயற்சி மேற்கொண்டுள்ளார். (சா-உ)


## ஏல விற்பனை

மயிலிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமானதும் நல்லநிலையில் உள்ளதுமான மோட்டார் வான் (BedFord) 22-10-77 சனிக்கிழமை பிற்பகல் 4-00 மணியளவில் சங்கத்தில்வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். வாகனத்தை பார்வையிட விரும்புவோர் சங்கவேலை நாட்களில் காலை 9—00மணி தொடக்கம் பிற்பகல் 5—00 மணிவரை பார்வையிடலாம். கூடிய கேள்விக்காரர் அன்றையதினம் அரைவாசிப் பணத்தையும் மிகுதிப் பணத்தை மூன்று நாட்களுள்ளும் செலுத்தி வானை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பொது முகாமையாளர்,
மயிலிட்டி க. தொ. கூ. சங்கம்,
ஊறணி, காங்கேசன்துறை.
7415

## பதவி வெற்றிடம்

1. வார்ப்பு வேலையாளர் (Moulder)
2. மெக்கானிக் (Petrol & Diesel)

இப்பதவிகட்கு தகமையுள்ள அனுபவம் உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சம்பளம்: தகமைக்கும் அனுபவத்திற்கும் ஏற்ப வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: 27-10-1977

பொதுமுகாமையாளர்,
காங்கேசன்துறைத் தொகுதி
அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்,
உதவி அரசாங்க அதிபர் அலுவலகம்,
தெல்லிப்பளை.
7419

# "நிபந்தனைகளை நிறைவேற்றுவிடின் வெடிவைத்துத் தகர்ப்போம்"

## மேற்கு ஜெர்மன் விமானக்கடத்தல்காரர்கள் எச்சரிக்கை

லண்டன், அக். 16
நான்கு பயங்கரவாதிகளால் நடத்தப்பட்டுள்ள மேற்கு ஜெர்மன் விமானக்கடத்தல் தொடர்பாக மேற்கு ஜெர்மனின் பல அரசியல் கட்சிகளும் கூடி ஆராய்வு நடத்திவருகின்றன.

மேற்கு ஜெர்மனியில் சிறை வைக்கப்பட்டுள்ள தமது இயக்கத்தைச் சேர்ந்த 11 பேரையும் விடுதலைசெய்ய வேண்டும் என்றும் 1 கோடியே 50 லட்சம் டொலர் தமக்குச் செலுத்தப்படவேண்டும் என்றும் கடத்தல்காரர்கள் அறிவித்துள்ளனர்.

### "விமானம் தகர்க்கப்படும்"

இந்த நிபந்தனைகளை குறிப்பிட்ட நேரத்திற்குள் நிறைவேற்றுவிட்டால் விமானத்தில் உள்ள மேற்கு ஜெர்மனின் கைத்தொழில் அதிபர் உட்பட பிரயாணிகளுடன் விமானத்தை வெடிவைத்துத் தகர்க்கப்போவதாக கடத்தல்காரர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கை நேரப்படி இக் காலக்கெடு இன்று காலை 7-30 மணியுடன் முடிவடைந்தது.

90 பிரயாணிகளுடன் மத்திய தரைக் கடலுக்குமேல் பறந்துகொண்டிருந்த மேற்கு ஜெர்மன் 'போயிங் 737' விமானத்தை 4 பயங்கரவாதிகள் கடத்திச் சென்றனர்.

'டைகர் குரூப்' என்ற ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம் இவ்விமானக் கடத்தலுக்குத் தாமே பொறுப்பு என அறிவித்துள்ளது தெரிந்ததே. (உ)

## வர்த்தகஉறவு பற்றி சீனு அறிக்கை

பீக்கிங் அக்.16
மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையில் உள்ள வர்த்தகத் தொடர்புகள் பற்றி சீனு கருத்து வெளியிட்டுள்ளது. மேற்கு ஐரோப்பிய நாடுகளுட் சோவியத்யூனியனுடன் கொண்டுள்ள வர்த்தகத் தொடர்புகள் அந்நாடுகளின் பந்தோபஸ்துக்கு ஆபத்தை விளைவிக்கும் என்று நவசின செய்திஸ்தாபனம் அறிவித்துள்ளது. (உ)

## கருணாநிதியை கைது செய்வதற்கு 'பச்சைக்கொடி' காட்டினரா பிரதமர்?

### மனோகரனின் கூற்றுக்கு மறுப்பு

சென்னை, அக். 16
பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய், தமிழ்நாடு முன்னாள் முதல்வர் கலைஞர் மு. கருணாநிதியை சர்க்காரியாகமிஷன் விசாரணை மூலம் கைது செய்வதற்கு தாம் பச்சைக்கொடி காட்டியுள்ளதாக தமிழ்நாடு நிதியமைச்சர் திரு. நாஞ்சில் மனோகரன் கூறியுள்ளதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளாராம். இத்தகவலை திமுக தலைமைப்பீடச் செயலாளர் திரு. சே. குப்புசாமி வெளியிட்டுள்ளார்.

திரு நாஞ்சில் மனோகரனின் இக்கூற்றுப் பற்றித் தாம் பிரதமருடன் தொடர்பு கொண்டு விசாரித்ததாகவும் தமிழ்நாடு அரசுக்கோ தமிழ்நாடு நிதியமைச்சருக்கோ எதுவும் கூறவில்லையென்று பிரதமர் கூறியதாகவும் திரு. குப்புசாமி தெரிவித்துள்ளார்.

சர்க்காரியா கமிஷன் விசாரணைக் கமிஷனே தவிர நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் அதற்குக் கிடையாது என்றும் பிரதமர் கூறியதாக அவர் தெரிவித்திருக்கிறார். (கொ-உ)

## எம். ஜி. ஆர். அரசு உதவி

சென்னை, அக். 16
பின்தங்கிய, குறிப்பாக ஹரிஜன மக்கள் வாழும்இடங்களில் உள்ள ஆலயங்களைப் புனரமைப்பதற்கு தமிழ்நாடு தலா 1000 ரூபா மானியம் வழங்கமுன்வந்துள்ளது.

இந்த வகையில் ஆலய புனரமைப்பு வேலைகள் முதலில் செங்கல்பட்டு மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படும்.

பின்னர் படிப்படியாக இப் புனரமைப்பு வேலைகள் தமிழ் நாட்டின் ஏனையபகுதிகளுக்கு விஸ்தரிக்கப்படும். (உ)

...

அரியாலை

## யூதாததேயு உற்சவம்

யாழ்ப்பாணம், திங்கள்
அரியாலை புனித யூதாததேயு ஆலயத்திருவிழா இம்மாதம் 19ம் திகதி ஆரம்பமாகிறது. 28ம் திகதி காலை திருநாட் பூஜையுடன் திருவிழா நிறைவு பெறும். (அ)

## கைதானவேளை நாடகம் ஆடினராம் இந்திரா!

### அமைச்சர் கூறுகிறார்

புதுடில்லி, அக். 16
"முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தம்மைக்கைது செய்தபோது "நடத்திய நாடகம்" ஒரு நாட்டின் பிரதமராகப் பதவி வகித்த ஒருவருக்கு ஏற்றதல்ல"

இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. அட்டல்பகாரி வாஜ்பாய் கூறினர்.

வெளிநாட்டில் [illegible] வுக்கு அவப்பெயரை [illegible] தும் வகையில் திருமதி காந்தி திட்டமிட்டு இயங்குகிறார் என்றும் திரு. வாஜ்பாய் கூறினர். (இ)

## கூட்டங்கள்! ஊர்வலத்துக்கு சென்னையில் தடை!

சென்னை, அக். 16
சென்னை நகரில் கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்துவதற்குத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இன்று நள்ளிரவு முதல் 19-ந் திகதி வரை இத்தடையுத்தரவு அமுலில் இருக்கும் என்று சென்னை பொலிஸ் கமிஷனர் அறிவித்துள்ளார்.

நாளை சென்னையில் தொழிலாளர் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் நடத்தப்படவிருந்த ஹர்த்தாலை முன்னிட்டே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

ஆவடியில் இத்தடையுத்தரவு மேலும் 15 நாட்களுக்கு அமுலில் இருக்கும் என்று ஆவடி உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன்ட் தெரிவித்தார்.

தொழிலாளர் போராட்டங்களின் எதிரொலியாக தமிழ்நாட்டின் சில பகுதிகளில் அமைதியின்மை ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## தமிழக வரலாற்று சிறப்பு விளம்பும் சாசனங்கள்

### திருத்தணியில் கண்டுபிடிப்பு

சென்னை, அக். 16
தமிழ்நாட்டின் அரசியல் மற்றும் ஆலயங்களின் வரலாற்று உண்மைகளை மேலும் வெளிப்படுத்தும் பல்லவ சோழ மன்னர் காலத்து பட்டயங்கள், சாசனங்கள் திருத்தணியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவை கி. பி. 9-வது நூற்றுண்டைச் சேர்ந்த வையென தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். பல்லவ காலத்து சாசனங்கள் திருத்தணி அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமண்யசுவாமி கோவிலுடன் தொடர்புபட்டவையாகஇருப்பதாகவும் இது அக்கோவிலின் வரலாற்றுச் சிறப்பை மேலும் விளம்புகிறது என்றும் ஆராய்ச்சியாளர் கூறினர்.

நந்திவர்மன் பற்றிய தகவல்களும் இவற்றில் அடங்கியுள்ளனவாம். (உ)

## புதிய கட்சி தொடங்கும் எண்ணம் உண்டா?

### இல்லை என்கிறர் இந்திரா

புதுடில்லி, அக். 16
முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி காங்கிரஸ் கட்சியில் இருந்துவிலகி புதியகட்சியொன்றை ஆரம்பிக்கவிருப்பதாக லண்டனில் இருந்து வெளியாகும் "கார்டியன்" பத்திரிகை பரபரப்பான செய்தியொன்றை வெளியிட்டுள்ளது.

இச்செய்தி மேலும் தெரிவிப்பதாவது: "திருமதி காந்தி, காஷ்மீர் விஜயத்தின்போது, கட்சி அமைப்பு பற்றி காஷ்மீர் முதல்வர் ஜனுப் ஷேக் அப்துல்லாவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தாராம். அத்துடன் காங்கிரஸ் ஜனதா கட்சியில் இருந்து வெளியேறும் அங்கத்தவர்களை தமது கட்சியில் சேர்த்துக் கொள்ளவதற்கு திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்செய்தி குறித்து "சமாச்சார் நிறுவன நிருபர் திருமதி இந்திராகாந்தியுடன் வினவிய போது காங்கிரஸ் கட்சி தன்னைத் தூக்கி எறியும்வரை தொடர்ந்து,கட்சியின் வளர்ச்சிக்காக சேவைசெய்யவிருப்பதாகவும், முதல்வர் ஜனுப். ஷேக் அப்துல்லாவுடன் தான் இதுவரை அரசியல் பேசியது கிடையாதெனவும் தெரிவித்துள்ளார். தனக்குப் புதிய கட்சி நிறுவும் எண்ணம் இதுவரை எழவில்லையெனவும் அவர் கூறியுள்ளார். (கெ-உ)

## 'கன்று என்னிடம் இருக்க பசுவினல் பயன் இல்லை'

### சஞ்சய் காந்தியை வைத்துக்கொண்டு பன்சிலால் இவ்வாறு கூறுவாராம்

புதுடில்லி, அக். 16
முன்னாள் இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. பன்சிலால் பதவியிலிருந்த போது திருமதி இந்திராகாந்தியின் புதல்வர் சஞ்சாய்க் காந்தியைத் தம் பக்கம் வைத்துக்கொண்டு 'கன்றுக்குட்டி தம்மிடம் இருக்கும்போது பசுவினல் என்ன செய்துவிடமுடியும்' என்று அடிக்கடி கூறுவார் என்று பன்சிலாலின் நெருக்கடி கால நடவடிக்கைகள் தொடர்பாக விசாரணை செய்துவரும் கமிஷன் முன்னிலையில் தெரிவிக்கப்பட்டது.

திருமதி இந்திரா காந்தி அரசின் அதிகாரி ஒருவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

### மாப்பிள்ளை வீதி

பன்சிலாலுக்கும் சஞ்சாய் காந்திக்கும் தெரிந்த பல பெண்கள் இருந்த வீதி ஒன்று அரசாங்கச் செலவில் அமைக்கப்பட்டதாகவும் அவ்வீதிக்கு 'மாப்பிள்ளை' வீதி என்று அழைக்கப்பட்டதாகவும் சாட்சி தெரிவித்தார்.

அமைச்சர் பதவியில் சேர்ந்த போது வாடகை வீட்டில் குடியிருந்த பன்சிலால் பதவி இழந்தபோது பல வீடுகளுக்கும் மாளிகைகளுக்கும் லட்சக்கணக்கான ரூபாவுக்கும் அதிபதியாக இருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## பெல்கிரேட்டில் கூடுவர்

பெல்கிரேட் ஆக் .16
ஐரோப்பிய நாடுகளின் பந்தோபஸ்து குறித்து ஆராயும் பொருட்டு 35 நாடுகளின் ராஜதந்திரிகள் பெல்கிரேட்டில் கூடவிருக்கின்றனர். (உ)

## எம். ஜி. ஆர். - தேசாய் மோதலுக்கு நான் வழிவகுக்கிறேன?

### மனோகரனுக்கு கலைஞர் பதிலடி

சென்னை, அக். 16
அனைத்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக்கழகத்தின் மாநில அரசுக்கும், மத்திய அரசக்கும் இடையே மோதலை உருவாக்க தாம் முனைவதாக நிதியமைச்சர் திரு. நாஞ்சில் மனோகரன் வெளியிட்டுள்ள கூற்றை எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி மறுத்துள்ளார்.

கலைஞர் இவ்விடயத்தில் ஏமாற்றமடைவார் என்றும் திரு. மனோகரன் கூறியிருந்தார்.

இதுபற்றி கலைஞர் தெரிவித்திருப்பதாவது:

"எதையாவது இட்டுக்கட்டிச்சொல்வது; அது பலித்தால் பலிக்கட்டும் என எதிர்பார்ப்பது நண்பர் மனோகரன் கையாளும் முறை. சில வாரங்களுக்கு முன் மத்திய அரசு என்னைக் கைது செய்வதற்கு பச்சைக்கொடிக் காட்டுவதாக பேசினர்; நானே என்னைக் கைது செய்யுங்கள் சிவப்புக்கொடியைக் காட்டுகிறோம் என்றேம். டேப்பு, வோப்பு என்றார்கள். நான் திகதியும் குறித்து தயாரென்றேன். பேசினல் பலிக்க வேண்டுமே, பலிக்கவில்லையே.

"இந்திராகாந்தி கைதுசெய்யப்பட்டபோது காங்கிரஸ் கிளர்ச்சியில் அண்ணு திராவிட முன்னேற்றக்கழகத் தொண்டர்களும் சேர்ந்திருப்பதாக ஜனதாகட்சி குற்றம் சாட்டுகிறது. இத்தாக்குதலை அண்ணு திராவிட முன்னேற்றக்கழக பத்திரிகைகள் கொட்டை எழுத்துக்களில் பிரசுரம் செய்துள்ளதே, இவைகளையெல்லாம் வைத்துக்கொண்டு மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் மோதல் ஏற்பட்டதா? அப்படி நினைத்தால் கருணாநிதிதான் ஏமாறுவார்.

"இவைகள் நடக்கும்போது இவைகளைப் பற்றி சிந்திக்கின்றவர்களாகிய மக்களே நீங்கள் தெம்பும் திரணியுமற்ற அவர்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள். கருணாநிதி எதிர்பார்க்கவுமில்லை. ஏமாறவுமில்லை என்று" (கெ-உ)

## வளாக ஆலயத்தில் லட்சுமி பூசை

யாழ்ப்பாணம்,திங்கள்
இலங்கைப்பல்கலைக்கழக யாழ் வளாக பரமேஸ்வரன் ஆலயத்தில் இன்று இலக்குமி பூசை நடைபெறவுள்ளது. விழாவில் கலாநிதி அ.சண்முகதாஸ் உரையாற்றுவார். இராமநாதன் நுண்கலைக்கல்லூரி பாணவிகளின் தாளவாத்தியக்கச்சேரி பக்திப் பாடல்களும் இடம்பெறும். (கெ-அ)

### கைதடி முகாமில் சில மணிநேரம் — 3

# மிஷனரிகளின் சேவையை நினைவுகூரும் அகதிகள்

தென்பகுதியிலிருந்துமட்டு மல்ல வவுனியா, மன்னார், ஈறற்பெரியகுளம் ஆகிய இடங்களிலிருந்தும் அகதிகள் குடும்பங்கள் வந்து முகாமில் தங்கியுள்ளன.

இவர்களில் பலர் பயத்தின் காரணமாகவே தங்கள் சொந்த இடங்களை விட்டு இங்கு வந்துள்ளனர், சிலர் கலவரத்தின் போது அயலவர்களுக்கு நடந்த சம்பவங்களை நேரில் பார்த்து அதனால் ஏற்பட்ட பயம் காரணமாக வந்திருந்தனர். சிலர் கலவரம் நடந்து ஒரு மாதத்தின் பின்னர்கூட இங்கு வந்துள்ளனர். சிலர் தமிழ்ப் பிரதேசங்களில் பயமின்றி வாழலாம் என்ற நம்பிக்கையில் வந்திருக்கின்றனர்.

முகாமில் உள்ளவர்களில் பெரும்பாலானோர் இந்திய வம்சாவழியினராவர். இவர்களில் சிலர்மட்டுமே இந்தியப் பிரஜா உரிமைக்கு விண்ணப்பித்தவர்களாகும். மற்றையோர் இலங்கைப்பிரஜைகளல்லாத நிலையிலுள்ளனர். இவர்களின் பெரும்பாலானோர் தமிழ்ப்பிரதேசங்களில் காணி பெற்று விவசாயம் செய்வதையே விரும்புகின்றனர்.

### இலங்கைப்பிரஜைகள் ஒருசிலரே

அகதிகள் முகாமில் இலங்கைப் பிரஜைகள் ஒருசிலர் மட்டுமே உள்ளனர். இவர்கள் கலவரத்தின்போது தங்கள் சொத்துக்களை இழந்தவர்களாகும், இவர்கள் இரண்டு மூன்று தலைமுறைகளாகத் தென்னிலங்கையில் வாழ்ந்தவர்கள். இவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் உறவினர்கள் இருக்கிறார்களா என்பதே தெரியாது.

கலவரத்தின்போது தென்னிலங்கையில் அமைக்கப்பட்ட முகாம்களில் தஞ்சமடைந்த அகதிகளில் சிலர் நிலைமை சீரானதும் தங்கள் சொந்த இடத்திற்கு மீண்டும் சென்று அங்கு வாழமுடியாது என்ற காரணத்தால் இங்கு வந்துள்ளார்கள்.

எதற்காக அங்கு வாழமுடியாது என அகதி ஒருவரிடம் கேட்டேன்.

"நான் சொந்த இடத்திற்குக் குடும்பத்துடன்போனேன். கலவரத்தின்போது றிமாண்டில் வைக்கப்பட்டவர்கள் பிணையில் வெளியே வந்ததும் எங்களை மிரட்டினார்கள்" என்றார்.

இனிமேல் அங்கு போகமாட்டீர்களா?

"எப்படிப் போகமுடியும். நிம்மதியாக அங்கே வாழமுடியாமல் இருக்கிறது. இங்கு ஒரு துண்டுக்காணி கிடைத்தால் பிழைத்துக் கொள்ளுவோம்" என்றார்.

கைதடி முகாமிலிருந்து சில குடும்பங்களைத் தனிப்பட்டவர்கள் தங்கள் தோட்டங்களில் கொண்டுபோய் குடியேற்றியிருக்கிறார்கள். நெடுங்கேணி, வவுனியாப் பகுதிகளில் இவர்கள் குடியேற்றப்பட்டிருக்கிறார்கள்.

### கொழும்புத்துறை அகதிகள்

கொழும்புத்துறை முகாமிலிருந்து வந்த அகதிகள் தனியாக முன்மண்டபத்தில் இருக்கின்றார்கள். அங்கு வீரநாதர் சுப்பையா என்ற ஒரு பெரியவர் இருக்கின்றார், அவர்தான் அவர்கள் தேவைகளைக் கவனித்து வருகின்றார்,

கொழும்புத்துறை முகாமில் 212 அகதிகள் இருந்தனர் இவர்களில் 90 பேர் மட்டுமே கைதடி முகாமிற்கு வந்துள்ளார்கள், மற்றையோர் அச்சுவேலி முகாமிற்குச் சென்றுள்ளனர்,

### வண. பிதாசிங்கராயரும் சங். சகோதரிகளும்

கொழும்புத்துறை முகாமில் தங்களை அன்பாக சகோதரர்கள்போல் அப்பகுதி மக்கள் கவனித்தார்களென்றும், தங்களுக்கு எதுவித குறையுமிருக்கவில்லையென்றும் சுப்பையா தெரிவித்தார்.

வண. பிதா சிங்கராயர் அடிகள் தினமும் அங்கு வந்து உடனுக்குடன் தங்கள் தேவைகளை கவனித்துச்சென்றார். அவர் தொடர்ந்து கூறியதாவது:

"வயிறு நிறைய சாப்பாடு, அதுவும் மீன், இறைச்சி, முட்டையுடன் கொழும்புத்துறை முகாமில் தினமும் தந்தார்கள். புதுப்புது உடைகள் ஒவ்வொரு அகதிகளுக்கும் வழங்கினார்கள். சில புடவைகள் விலை உயர்ந்தவைகளாக இருந்தன. 100 ரூபாவிற்குக்கூட அப்படியான புடவைகள் வாங்கமுடியாது.

**கா. யோகநாதன்**

கொழும்புத்துறை முகாமை நாங்கள சொந்த வீடாகத்தான் கருதினோம். எல்லோருடனும் சொந்தச் சகோதரர்கள்போல் பழகினோம். அகதிகள் என்ற நினைப்பே வரவில்லை. அங்கு 'சிஸ்ரர்ஸ்' எங்களுடன் அன்பாகப் பேசி எங்கள் குறைகளை உடனுக்குடன் தீர்த்துவைத்தார்கள். குழந்தைகளுக்குப் பால், உணவு, பிஸ்கெட்டுகள் வழங்கினார்கள்.

கொழும்புத்துறை முகாமை விட்டு நாங்கள் இங்கு புறப்பட்ட தினம் வண, பிதா சிங்கராயரைச் சுற்றி எல்லாரும் அழத் தொடங்கிவிட்டார்கள். அவர் பேசாமல் நின்றுகொண்டிருந்தார், அவர் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது. உண்மையான பாசப் பிணைப்பால் கட்டுப்பட்டிருந்தோம்.

எங்களைக் கவனிப்பதற்காக அவர் இங்கும் ஒரு 'சிஸ்டரை' கொழும்புத்துறை முகாமிலிருந்த சிலருக்குத் தொற்றுநோய் காணப்பட்டதால் எல்லோருக்கும் தடுப்பு ஊசி ஏற்றப்பட்டது. கைதடி முகாமில் உள்ளவர்களுக்கும் நோய் தடுப்பு ஊசி ஏற்றப்பட்டது.

கைதடி முகாமிற்கு திரு. அரைராஜா என்பவர் பொறுப்பாளராக இருப்பதாக அகதிகள் தெரிவித்தனர். நாம் சென்ற சமயம் அவர் அங்கு இல்லை. அகதிகள் விஷயமாக அவர் எங்கோ சென்றிருந்தார். வயிறு நிறைய சாப்பிடுங்கள். என்று அவர் அடிக்கடி தங்களிடம் கூறுவார் என அகதிகள் தெரிவித்தனர்.

இப்பொழுது மழைகாலம். இடீர் திடீரென எதிர்பாராமல் மழை பெய்யும். ஆனால் முகாமில் திறந்த வெளியில் தான் சமையல் செய்கிறார்கள். சிலசமயம் சமைத்துக் கொண்டிருக்கும் போதே மழை பெய்ய ஆரம்பித்துவிடும். சமையலுக்கென ஒரு பந்தலோ, கொட்டகையோ போட வேண்டியது அவசியம்.

முகாமில் இந்தவர்களுக்கு இதுவரை காணி வழங்கப்பட்டிருக்கிறதா? என்று கேட்டேன்.

'வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை. வழங்கப்படும்என்றே தினமும் சொல்கிறார்கள்' என்று ஒரு வயோதிபர் கூறினார்.

### வி. பி. நடவடிக்கை எடுக்கிறாராம்

கூட்டுறவு அடிப்படையில் ஒருகம்பெனி மூலம் காணி வழங்க திரு. வி. பொன்னம்பலம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

திரு. பொன்னம்பலம் முகாமிற்கு வந்து 140 பேரிடம் கையெழுத்து வாங்கிச்சென்றதாகவும், அதன்பின் ஒருமாதமாகியும் ஒரு அறிவித்தலும் கிடைக்கவில்லையென்றும்அவர் கூறினார்.

பலை முகாமிலிருந்து இங்கு வந்தவர்களில் சிலர் சமூக சேவைப் பகுதியினரால் வழங்கப்படும் 350 ரூபாவைப்பெற்றுக் கொண்டு சொந்த முயற்சியால், வேலை தேடச் சென்றுள்ளனர்.

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. முருகவேள் அடிக்கடி முகாமிற்கு வந்து அகதிகளின் குறைகளைக்கேட்டறிந்து உடனுக்குடன் தீர்த்து வைப்பதில் அக்கறை காட்டி வருகின்றார்.

### கப்பலைக் காத்திருந்தவர்

காரைநகரைச்சேர்ந்த பிலிப் சங்கரப்பிள்ளை என்ற வயோதிபர், அறையொன்றில் மூலையில் படுத்திருந்தார். இவர் நொச்சியாகமத்திலிருந்து அகதியாக வந்துள்ளார். அவர் நோயால் பீடிக்கப்பட்டிருந்தார். கையில் ஒரு மருந்து மருந்து சீட்டை வைத்திருந்தார்.

அவரிடம் அருகில் சென்று பேச்சுக் கொடுத்தேன்.

என்ன தொழில் செய்தீர்கள்? தான் வெளிநாட்டில் ஊழியம் செய்யப் புறப்பட்டேன், 'எபநேசர்' என்றகப்பலில் செல்லக் காத்திருந்தேன், அதற்குள் கலவரம் வந்து விட்டது' என்றார்.

'கப்பல் வரவில்லையா? என்று கேட்டேன்.

'பின்லாந்தைச் சேர்ந்த இக்கப்பல், பயங்கரவாதிகள் குழப்பத்தின் போது கொழும்பு துறைமுகத்திலிருந்து அனுப்பப்பட்டுவிட்டது. அதன்பின் இக்கப்பலை எதிர்பாத்துக் கொண்டிருக்கிறேன். இன்னும் வரவில்லை'

'எப்படி இங்குவந்தீர்கள்?'

'கலவரம் தொடங்கியதும். காட்டுமார்க்கமாகப்புறப்பட்டு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தேன்.'

'எந்த முகாமுக்கு வந்தீர்கள்?' 'சுகவீனமுற்றிருந்ததால் ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின் யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுச் சிகிச்சை பெற்றேன். இன்னும் சரியான சுகமில்லை'

'இனிமேல் என்ன செய்யப் போகிறீர்கள்?'

'ஊழியம் செய்யக் கப்பலுக்கு போக வேண்டும் என்பது தான் என்விருப்பம்'

'காணி கிடைத்தால் விவசாயம் செய்ய விரும்பவில்லையா? 'அது என்னால் முடியாத காரியம்'

வவுனியாவிலிருந்து வந்த எம். அழகு என்பவரைச் சந்தித்தேன். இவர் நோர்வூட் தோட்டத்தைச் சேர்ந்தவர். வவுனியாவில் திருமணம் செய்தவர். ஒரு பிள்ளை மட்டும் உண்டு.

என்னதொழில் பார்த்தீர்கள்? என்று கேட்டேன்.

'விவசாயம் தான் செய்து வந்தோம்' என்றார். இனி என்ன செய்யப் போகிறீர்கள் என்றதற்கு, "காணி கிடைத்தால் இங்கு இருக்கலாம். இந்தியா எனக்கு முன்பின் தெரியாது' அங்கு போகவும் விரும்பவில்லை. நான் பிறந்து வளர்ந்தது இங்குதான். என் பெற்றோர்கள் தோட்டத்தில்தான் இருக்கிறார்கள் அவர்களுக்கு என்ன நடந்ததென்று தெரியவில்லை" என்று கூறினார்.

"தனிப்பட்டவர்களின் தோட்டத்தில் வேலைசெய்ய விரும்புகிறீர்களா?"

"கடைசி முடிவு தெரிந்த பின்தான் அதுபற்றிச் சொல்ல முடியும்."

சொந்தத்தில் காணி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன்தான், இவரைப்போல், பலரும் தொடர்ந்து முகாமிலிருந்து வருகின்றார்கள்.

சுறுசுறுப்புள்ள ஒரு படித்த இளைஞரை இங்குசந்தித்தேன். இவர் பெயர் அலெக்சாந்தர் அரசநிலை. இவர் ரத்னபுரியைச் சேர்ந்தவர் கலவரத்தின் போது கம்பெனியில் விற்பனைப்பிரதிநிதியாக வேலைபார்த்து வந்தவர்.

30வயதான இவ்வாலிபர் ஜி. சி. ஈ. பரீட்சை சித்தியடைந்துள்ளார். காணி பெற்று விவசாயம் செய்ய விரும்புகின்றார் வியாபாரம் செய்வதிலும் ஆர்வமுடையராக இருக்கின்றார். அகதிகள் முகாமில் ஒடியாடித் திருந்து மற்றும் அகதிகளுக்கு உதவி செய்வதில் ஊக்கமுள்ளவராக இருக்கிறார்.

(க-அ)

## [...]கொலை செய்து கல்லில் கட்டி ஆற்றில் போட்டனர்

ஆனைமடு, ஞாயிறு

குடும்பஸ்தர் ஒருவர் பயங்கரமாகக் கொலைசெய்யப்பட்டு ஆற்றில் வீசப்பட்டாராம்.

ஆனைமடுவ பொலிஸ் பகுதியில் நடைபெற்றுள்ள இச்சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கை, கால்கள் கயிற்றால் கட்டப்பட்டும் நீரில் உடன் அமிழும் வகையில் உடலில் இருபாரமான கற்கள் கட்டப்பட்டும் இவரது உடல் ஆற்றில் கண்டுபிடிக்கப்பட்டது.

இவர் விமலசேன என்ற தம் கணவர் என்று உக்குமெனிக்கா என்ற பெண் பொலிசாரிடம் அடையாளம் காட்டியுள்ளார்.

இம்மர்மக்கொலை பற்றிப் பொலிசார் தீவிர புலன்விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

(உ)


## நவராத்திரி சரஸ்வதி பூஜைக்கு

தேவையான

- விளவு சூடம்
- அபிஷேக திரவியங்கள்
- அபிஷேகச் சந்தனம்
  (உடன் யந்திரத்தினல் அரைக்கப்பட்டது)
- அபிஷேகக் குங்குமம்
- அபிஷேக விபூதி
- அபிஷேக வாசனைதிகள்
- கற்பூரம், சாம்பிராணி ஊதிபத்திகள்
- நைவேத்தியப் பொருட்கள்
  (அவல், கற்கண்டு, சர்க்கரை முதலியன)

மற்றும்

சகல சாமான்களும் நிதானமான விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

கடந்த 44 ஆண்டுகளாக நற்சேவை புரிந்து நற்பெயர் பெற்றவர்கள்.

### எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

(மருந்து, மருந்துச்சாக்கு, வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை, வியாபாரிகளும்)

53, கே. கே. எஸ். ரோட், பெரியகடை, யாழ்ப்பாணம். போன்: 541 Residence 7068

"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11 போன்: 25825


## சகல தொகுதிகளிலும் வீடமைப்புத் திட்டங்கள்

கொழும்பு, ஞாயிறு

சகல தேர்தல் தொகுதிகளிலும் வீடமைப்புத்திட்டங்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

வீடில்லாப்பிரச்னையைத் தீர்க்கும் வகையில் எம்.பிக்களின் ஆலோசனையின் அடிப்படையில் இத்திட்டம் செயற்படுத்தப்படும்.

இத்திட்டத்திற்கு பல எம்பிக்கள் தம் ஆலோசனைகளை ஏற்கனவே சமர்ப்பித்து விட்டனரென்றும் வீடமைப்பு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(உ)

## "மிளகாய், வெங்காயம் இறக்குமதி யோசனையைக்கைவிடுக"

### கோப்பாய் எம். பி. பிரதமருக்குத் தந்தி

யாழ்ப்பாணம், திங்கள்

அரசாங்கம் வெங்காயம் மிளகாய் இறக்குமதி செய்யும் திட்டத்தை உடன் கைவிடவேண்டும் என பிரதம மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு கோப்பாய் தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை தந்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார்

வடபகுதி விவசாயிகள் இந்தநாட்டின் பெருமளவு அந்நியசெலவாணியை மீட்டுத்தரும் போது இறக்குமதியினால் அவர்கள் உற்சாகம் குன்றி உற்பத்திகுறைய இது ஏதுவாகும். அத்துடன் அவர்களது தொழில் வாய்ப்புக்களும் பாதிக்கப்படுமெனவும் திரு. கதிரவேலுப்பிள்ளை தமது தந்தியில் கூறியுள்ளார்.

(கெ-இ)

**Regal** (Jaffna)
Daily at 4-45 7-00 & 9-30 p. m only
The long awaited full length documentary on the wonders of Colourful fascinating undersea world of the deep oceans in the glory of Eastman Colour.
**The Great Barrier Reef**
A must film for School children பள்ளிக்கூடப் பிள்ளைகள் பார்க்கவேண்டிய படம்.

**சாந்தி** தினசரி 10-30, 2-30, 6-30 9-45
யாழ். நகர்
போன்; 7642
ஜெமினிகணேஷ்
சரோஜாதேவி
**பணமா பாசமா** (புதிய பிரதி)

**மனோஹரா** எம். ஜி. ஆர். - லதா-நாகேஷ்
(யாழ்ப்பாணம்) அறிமுகம் பவானி
தினசரி மு.ப. 10-30 பி.ப 2-30 6-30, 9-45
நடித்த
**உழைக்கும் கரங்கள்**
(ஈஸ்ட்மன் கலர்)

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
**துணிவே துணை**

**லிடோ** போன்; 7693
(யாழ். நகர்)
காலை 7-00 மணிக்கு காட்சி ஆரம்பமாகும்,
காட்சிகள் தொடர்ந்து காண்பிக்கப்படும்.
எம். ஜி. ஆர். — லதா நடித்த
**நீதிக்கு தலைவணங்கு**

**வின்ஸர்** தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ்ப்பாணம்) சிவாஜி, மஞ்சுளா, தேவிகா, கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
**சத்யம்**
(ஈஸ்ட்மன் கலர்)

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த்
நடித்த
**அன்னக்கிளி**

**ராணி** (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
முத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்
**பெண் தெய்வம்**

# உதைபந்தாட்டம்

அரியாலை, ஞாயிறு

கொக்குவில் இந்துக் கல்லூரி மூன்று பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிகளுக்கும், யாழ். பரியோவான் கல்லூரி மூன்று பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிகளுக்கு மிடையில் கொக்குவில இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் முதலாம் பிரிவில் 3-2 கோல்களால் வெற்றி பெற்ற கொக்குவில் இந்துக் கல்லூரிக் கோஷ்டி இரண்டாம் பிரிவில் 3 1 கோல்களும் மூன்றும் பிரிவில் 3-2 கோல்களும் பெற்றுத் தோல்வியடைந்தது.

யாழ்.பரியோவான் கல்லூரி மூன்று பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிகளுக்கும், மானிப்பாய் இந்துக் கல்லூரி மூன்று பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிகளுக்கு மிடையில், பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றும் பிரிவுப் போட்டிகளில் முறையே 5-1, 2-1, 6 1 கோல்களால் பரியோவான் கல்லூரிக் கோஷ்டிகள் பெரும் வெற்றியீட்டிக் கொண்டன.

யாழ்.பரியோவான் கல்லூரி 2-ம் 3-ம் பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிகளுக்கும், ஊர்காவற்றுறை சென்ற் அந்தனிஸ் கல்லூரி 2-ம் 3-ம் பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிகளுக்கு மிடையில் சென்ற் அந்தனிஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் 2-ம் பிரிவில் 3-2 கோல்களாலும், 3-ம் பிரிவில் 2-0 கோல்களாலும் பரியோவான் கல்லூரி கோஷ்டிகள் பெரும் வெற்றி பெற்றன.

(அ)

**RIO** (Jaffna)
Daily 4 Shows
WUTHERING HEIGHTS
MORE SUITABLE
For Adults

**நாகம்மா**
(சுன்னாகம்)
தினசரி 6 45 10-00
சிவாஜி-பத்மினி
நடித்த
**கோடீஸ்வரன்**

**புலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி பி. ப. 2-30, 7-00
ஆனந்தன்-சச்சு
**வீரத்திருமகன்**

யாழ் தேநீர்க்கடைகள்

# சுகாதாரத்தைக் கவனிக்க விசேஷ குழுக்கள்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணப்பகுதியிலுள்ள தேநீர்க் கடைகள் போசன சாலைகளின் சுகாதார நிலைமைகளைக் கண்காணித்து ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்குப் புதிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகரப் பகுதியிலுள்ள தேநீர்க் கடைகளும், சாப்பாட்டுக் கடைகளும் சுத்தமற்றிரும்பதாக யாழ். மாநகரசபை விசேட ஆணையாளருக்குச் செய்யப்பட்ட புகார்களைத் தொடர்ந்து இப்புதிய நடவடிக்கைகளைத் திரு. க சிவஞானம் மேற்கொண்டுள்ளார்.

சுகாதாரப் பரிசோதகர்கள் உணவுப்பரிசோதகர்கள் ளடங்கிய குழுக்களாகப் பிரிக்கப்பட்டு இக்குழுக்கள் மேற்படி கடைகளுக்குச் சென்று அவற்றின் சுகாதார நிலையற்றிக் கவனிப்பதுடன் சுத்தமற்றதாகக் காணப்படும் கடை உரிமையாளர்களுக்கு 7 நாள் அவகாசமளித்து அதற்குள்ளும் அவர்கள் தமது கடைகளின் நிலையினை மாற்ருவிட்டால் அவர்கள் மீது வழக்குத் தொடரப்படும்.

யாழ்ப்பாணப் பகுதியில் இதுவரை இக் குழுவினர் 150-க்கு மேலான கடைகளில் தமது பரிசிலனையை நடாத்தி 7 நாள் நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளதாகவும் திரு. சிவஞானம் தெரிவித்தார்.

**பாண்**

இது இவ்விதமிருக்க யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் உள்ள பேக்கரிகளிலிருந்து பாண்கள் திறந்தபடியும், கார்களில் கால்வைக்குமிடங்களிலெல்லாம் போடப்பட்டு வருவதாகவும், இப்பாண் விநியோகம் சுத்தத்திற்கும் சுகாதாரத்திற்கும் மாருனது என்றும் தெரிவிக்கப்பட்ட புகாரை அடுத்து யாழ்ப்பாணத்தின் பிரதான சந்திகளில் சுகாதாரப் பரிசோதகர்கள் இவ்வாறு வரும் வாகனங்களுக்கு எதிராக வழக்குத் தொடர திரு. சிவஞானம் ஒழுங்கு செய்துள்ளார்.

(கா-அ)

# 'புனித தீர்த்தங்கலந்த புனித ஏரி யமுனரி'

அரியாலை, ஞாயிறு

'யமுனரி ஐந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட ராஜதானியாகும் இது யமுனு, கங்கை, காவேரி ஆகிய புனித தீர்த்தங்கள் கலக்கப்பட்ட புனித ஏரியாகும். இதனை சிங்கப்பர ராஜ சேகரன் கட்டினுன் என நம்பப்படுகிறது. இந்த ஏரியைப் புனரமைப்புச் செய்ய 1976-ம் ஆண்டு அரசினர் நிதி வழங்கினர். நாம் ஆரம்பித்திருக்கும்புனச்மைப்பு வேலைகளில் பரியோவான் கல்லூரியினரும் உதவி புரிந்து வருகின்றனர். பழமை மிகுந்த இந்த ஏரியின் புனிதத்தன்மையையும், அதன் பண்டைய வரலாற்றையும் மக்கள் அறிய பரி. யோவான் கல்லூரிதொல் பொருள் ஆய்வுச்குழு மாணவர்கள் எடுத்துவரும் முயற்சி பெரிதும் பாராட்டுக்குரியது'

இவ்வாறு யாழ்ப்பாணத் தொல்பொருள் நிலைய அதிபர் திரு. எம். பி. செல்வரத்தினம் யாழ். பரியோவான் கல்லூரி தொல்பொருள் ஆய்வுக் குழு மாணவர்களால் உருவாக்கப் பெற்ற 'யமுனுஏரி' பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து வைத்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

பரி. யோவான் கல்லூரி அதிபர் திரு. சி. ஈ. ஆனந்தராசா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. செல்வரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

'பல கல்லூரிகள் திட்ட வேலைகளை மேற்கொண்டு வருகின்றன. அவைகளில் மிகவும் ஆக்க பூர்வமானது இத்திட்டமாகும். தொல் பொருளால் அன்றுட வாழ்வில் என்ன பலன் என்று கேட்கப்படலாம். மக்களின் கலாச்சாரத்தைத் தொல் பொருளியல் எடுத்துக் காட்டுகிறது. இதனாலேயே உலக நாடுகள் தமது நாட்டின் பழைமையையும் பண்டைய கலைகலாக்[illegible]களையும் பேணிப்பாதுகாத்து வருகின்றன. பண்டைய தமிழ் ராஜ்யமான நல்லூரின் பழமையையும், சிறப்பையும் பேணிப்பாதுகாக்க பரி, யோவான் கல்லூரி தொல் பொருள் ஆய்வுக்குழு மாணவர்கள் எடுத்துவரும் இம்முயற்சி மேலும் வளரவேண்டும். இம் முயற்சிக்குக் கல்லூரியும், பொது மக்களும் போதிய ஆதரவு வழங்க முன்வர வேண்டும்.'

செயல் திட்ட ஆசிரியர் என். மயில்வாகனம் வரவேற்புரையும் செல்வன் எஸ். ஆனந்தராசா நன்றியுரையும் ஆற்றினர். இவ் வைபவத்தில் மாணவர்களுட்பட பெருந்தொகையானேர் கலந்து கொண்டனர்.

(அ)

# சி.பா. தமிழர்நல உரிமைக்கு ஒரு புதிய அமைப்பு

அரியாலை, ஞாயிறு

'இலங்கையில் வாழும் சிறுபான்மைத் தமிழ் மக்களின் சகல அடிப்படை உரிமைகளையும் பெற்று சமவுரிமையுடன் வாழ வழி செய்வது' என்ற அடிப்படை நோக்கத்தை முன் வைத்து "இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் விடுதலை முன்னணி" என்ற பெயருடைய புதிய ஸ்தாபனமொன்று அரியாலையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

நூற்றுக்கணக்கான கட்சி சார்பற்ற சிறுபான்மைத் தமிழர்கள் கலந்து கொண்ட இக் கூட்டம் திரு. செபமாலை தலைமையில் நடைபெற்றது.

இலங்கை முழுவதும் வாழும் ஐந்து லட்சத்துக்கு அதிகமான சிறுபான்மைத் தமிழர் சமூகத்தைப் பிரதிபலிக்கத் தக்க வகையில் செ[illegible] அரச பேரவையில் பிரதிநிதித்துவம் இல்லா

(6ம் பக்கம் பார்க்க)

# '24மணிநேரம்' இன்றுவெளியீடு

யாழ்ப்பாணம், திங்கள்

இனக்கலவரத்தின் போது யாழ்ப்பாணத்திலும் மற்றும் நாடுமுழுவதிலும் நிகழ்ந்த வன்செயல்களை ஆய்வு செய்து 'நீலவண்ணன்' எழுதிய '24 மணிநேரம்' என்ற நூல் இன்று திங்கட்கிழமை மாலை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் வெளியிடப்படவிருக்கிறது.

வரதர் வெளியீடான இந்நூல் வெளியீட்டுவிழா எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறும், திரு.வ. பொன்னம்பலம் வெளியீட்டுரை வழங்குவார் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை எம்.பி, திரு. வெற்றிவேலு யோகேஸ்வரன் எம் பி திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் ஆகியோர் சிறப்புரை வழங்குவர்.

(அ)

வெள்ளித்திரையின் வண்ணஜாலங்கள் தித்திக்கும் தேன் விருந்து

**ராஜா** - தினசரி 10-30, 2-15, 6-15, 9-45.
யாழ்நகர்

தேவேந்திரனின் அகந்தையும் தருவாசக முனிவரின் சாபமும் பாற்கடலில் நடந்ததோர் சோதனை! மந்திர மலையை மத்தாகவும் வாசுகி பாம்பை கயிருகவும் பாற்கடலை அசுரர்கள் கடைந்ததோர் விந்தை!

இரண்யேஸ்வரனின் தம்பியை கொன்ற பரந்தாமனை ஒழித்துவிட நாளை எண்ணும் இரண்யேஸ்வரன்: இரத்தத்தின் உறவால் உருவாகிய பிள்ளை பிரகலாதனே ஹரிபக்தன். இவர்களுக்கிடையே கடும் போட்டி. முடிவு என்ன?

சீர்காழி கோவிந்தராஜன்
ஜெயசித்திரா, எம். ஆர். ராதா,
சௌகார்ஜானகி, எஸ் ஏ. அசோகன்
கே. ஆர். விஜயா, ஜெமினிகணேசன்,
எம். ஆர். ஆர். வாசு நடித்த



**தசாவதாரம்**
(கண்ணபிரானின் பத்து அவதாரங்கள்)
கதை-வசனம்-டைரக்ஷன்! [வண்ணப்படம்]
கே. எஸ். கோபாலகிருஷ்ணன்

**மணிவாக்கு**

இன்றைக்கு என்னிடம் வந்த ஒரு மனிதன் "உண்மையான சேவை செய்யாத நாட்களில் எனது வாழ்க்கையே வாழ்க்கை போலில்லை" என்று கூறினன்.

—காந்திமகான்

ஈழநாடு
The Eelanaadu

## வெளிநாட்டு உதவி

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு ஜப்பான் அரசாங்கம் பெருமளவில் உதவி புரியவிருக்கின்றதென்னும் செய்தி மிக்க மகிழ்ச்சிக்குரியதாகும்.

இலங்கையின் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு நீண்டகாலத் தவணையிலான கடனை வழங்கும் அதேநேரத்தில் கொழும்பில் 'டெலிவிஷன்' நிலையமொன்றை நிறுவ ஜப்பான் உதவ முன்வந்துள்ளதாம்.

ஜப்பான் மட்டுமல்லாது அமெரிக்காவும் பிரிட்டனும் மேற்கு ஜெர்மனியும் பொருளாதார உதவிகளை வழங்கவிருக்கின்றன என்றும் கடனாகவும், நன்கொடையாகவும், உணவுப்பண்டங்களாகவும்இந்த நாடுகள் இந்த உதவிகளை வழங்கவிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நிதிஅமைச்சர் திரு. ரொனி டி. மெல் வெளிநாடுகளுக்கு மேற்கொண்ட விஜயத்தின் பயனாக இந்த உதவிகள் கிடைக்கவிருக்கின்றன.

இதேசமயம் வர்த்தக அமைச்சர் திரு. அத்துலத்முதலி சீனவுக்குப் பிரதம விசேஷ தூதுவராகச் சென்றிருக்கிறார் இலங்கை-சீன ரப்பர்-அரிசி ஒப்பந்தத்தைப் புதுப்பிப்பதற்காக அவர் சென்றிருக்கிறார். மேற்கொண்டும் வேறு உதவிகளைப் பெறுவதிலும் அவர் வெற்றிபெறக்கூடும்.

இலங்கை சுதந்திரமடைந்தபின் எந்தக் கட்சி ஆட்சி பீடத்துக்கு வந்தாலும் பிட்சாபாத்திரம் ஏந்திக்கொண்டு வெளிநாடுகளுக்கு அமைச்சர்கள் செல்வது வழக்கமாகிவிட்டது.

வெளிநாடுகளிடமிருந்து உதவி பெறுவது நமது நாட்டுக்குப் புதிய விஷயமல்ல.

நமது நாட்டில் ஆட்சி பீடத்துக்கு வந்துள்ள கட்சியைப்பற்றியும் அது ஸ்திரமான அரசாங்கமாக இருக்குமா அதன் கொள்கை என்ன என்பதெல்லாவற்றையும் அறிந்தபின்தான் எந்த அளவுக்கு என்னவிதமான உதவிகளைக் கொடுக்கலாம் என்பதுபற்றி வெளிநாட்டு அரசுகள் தீர்மானிக்கின்றன. ஜப்பான் நாட்டைப் பொறுத்தவரையில் இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது பேரழிவுக்குள்ளான நாடு. ஆனலும் மிகக் குறுகியகாலத்தில் தனது கடும் உழைப்பினல் இன்று பொருளாதாரத்திலும் தொழிற்துறையிலும் உணவுற்பத்தியிலும் முன்னணியில் நிற்கும்நாடும் அதுதான்.

இதேபோன்றுதான் நவசீனவும் இலங்கைக்குப்பின்னர் அது விடுதலைபெற்றாலும் எந்த நாட்டிடமும் கையேந்தாமல் கடும் உழைப்பினல் ஒரு வல்லரசாகத் திகழ்கின்றது.

இந்த இரு நாடுகளின் முன்னேற்றம் இனியாவது நமது நாடு சொந்தக்காலில் நிற்பதற்கு வழிவகுக்க வேண்டும்.

ஜப்பானிலிருந்தும் சீனவிடமிருந்தும் நாம் பெறக்கூடிய உதவி நம்து நாட்டிலுள்ள மூலவளங்களைக் கொண்டு நாம் நமக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்வதற்கு உதவுவதாக இருக்க வேண்டும்.

உற்பத்தியான பொருள்களை இறக்குமதி செய்வதன் மூலமும் அவற்றை உதவியாகப் பெறுவதன்மூலமும் நாட்டின் உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளலாம். ஆனல் நாட்டின் பொருளாதாரத்தை விருத்தி செய்துவிட முடியாது.

எனவே ஜப்பானிடமும் சீனவிடமும் இருந்து நமது இன்றையத் தேவையைப் பூர்த்திசெய்யக்கூடிய உதவியிலும்பார்க்க நாட்டை வளம்படுத்தக்கூடிய உதவிகளையும் ஆலோசனைகளையும் பெறுவது மிக முக்கியமானதாகும்.

"ஆராய்ச்சி நூல்கள் மூலம்"

# மொழிப்பற்று வளரும்; வரலாறு தெரியவரும்" — வித்தி

மாவிட்டபுரம், ஞாயிறு "நூல் வெளியீடு என்பது இன்று நேற்றல்ல ஆறுமுக நாவலர், சி. வை. தாமோதரம்பிள்ளை ஆகியோரது காலத்திலிருந்தே இருந்து வரும் ஒன்றாகும் அவ்வரிசையில் நாம் எத்தனையோ நூல்களைக் கண்டுவிட்டோம் இன்றும் காண்கின்றோம் இன்று புதிதாக வெளிவரும் "ஏழாலை" என்னும் இந்நூல் ஒரு கிராமத்தின் சிறப்பியல்புகளை அப்படியே படம் பிடித்துக் காட்டுவதாய் மிளிர்கிறது" இதுபோன்று மற்றும் ஒவ்வொரு கிராமங்களைப் பற்றியும் ஆராய்ச்சி நூல்கள் வெளிவருமானல் பல்வேறு வரலாற்று உண்மைகள் வெளிக்கொணரப்படும்."

இவ்வாறு ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா எழுதிய "ஏழாலை" என்னும் நூல் வெளியீட்டுவிழா ஏழாலை ஏழு ஆலய முன்றலில் நடைபெற்ற சமயம் அதில் கலந்துகொண்டு நூலை வெளியிட்டு வைத்துப் பேசிய இலங்கை பல்கலைக்கழக யாழ். வளாகத் தலைவர் கலாநிதி சு. வித்தியானந்தன் கூறினர்.

ஒய்வு பெற்ற பாடசாலை அதிபர் திரு. சு. அம்பலவாணர் தலைமையில் விழா நடந்தது.

**ஆசிரியருக்குக் கடிதம்:**

## இந்தியா செல்வதானல் செலாவணி வேண்டாமா?

12-10-77 ஈழநாட்டில்வெளிவந்த ஆசிரியத் தலையங்கத்தைப் படித்தேன். இலங்கைப் பிரஜைகளும் புகையிரதத்தில் இந்தியா சென்றுவர போக்குவரத்து அமைச்சர்கடந்த10-ம் திகதியிலிருந்து அனுமதித்துள்ள செயலைத் தாங்கள் பாராட்டியுள்ளீர்கள்.

அதேவேளை முக்கிய இன்னெரு விடயத்தையும் சுட்டிக்காட்டியிருக்க வேண்டுமென்றே கருதுகிறேன்.

முன்னர் விமானத்தில் சென்று திரும்புவதற்கு இங்கேயே போய் திரும்பும் டிக்கட் எடுக்கவசதி செய்யப்பட்டது. அதற்கு இலங்கை நாணயம் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் அதன் தொகை அதிகமாகவே இருந்தது.

இன்று புகையிரதத்தில் போய்த் திரும்ப ரூபா 100/- போதுமானதாக இருக்கின்றது.

இந்த டிக்கட் அனுமதியினல் மட்டும் பௌத்த இந்து யாத்திரீகர்கள்பயனடைவார்களா? இந்தியா சென்று திரும்புவதற்குப் பணம் வேண்டாமா?

அந்நியசெலாவணி அனுமதி முன்பிருந்தது. தற்போது அந்த அனுமதி கொடுக்கப்படுவதில்லை. இதனல் கள்ளச் சந்தை வியாபாரிகள் பெரும் பணம் சமபாதித்துவருகிறார்கள். சில சமயங்களில் இங்கு ரூபா 2000/-ம் கொடுத்தால் அங்கு ரூபா 1000/-ம் தான் கிடைக்கின்றது. சில காலங்களில் இங்கு 1600/- பணம் கொடுத்தால் அங்கு ரூபா 1000/-ம் தருகிறார்கள்.

இதைவிட பவுண், டாலர் நோட்டுகளையும் அங்கு செலவைச் சமாளிப்பதற்குக் கள்ளத்தனமாகக் கொண்டுசெல்கிறார்கள். இங்கு ஒரு டாலர் 18 ரூபாவிலிருந்து 22 வரை விலைபோகின்றது. இப்பணத்தின் இந்திய பெறுமதி ரூபா 12/- வரையிலேயே இருக்கின்றது.

இதனல் கள்ளக்கடத்தல் அதிகரிப்பதுடன் இங்குள்ள டாலர் பவுண் வியாபாரிகளும் கொளுத்தபணம் பெறுகிறார்கள்.

இந்தியாவுக்குப் புகையிரதத்தில் சென்றால் மட்டும் போதுமா? அப்படி அனுமதிப்பதும் செலாவணி எதுவும் வழங்காது விடுவதும் அரசாங்கத்திற்கு நல்லதல்ல. மறைமுகமாகக் கறுப்புச் சந்தைக்காரரை இது ஊக்குவிக்கின்றதல்லவா?

எனவே இந்தியா செல்லும் யாத்திரீகர்களுக்கு முன்னர்போல் ஒருகுறிப்பிட்ட தொகையை அந்நிய செலாவணியாக வழங்கப் போக்குவரத்து அமைச்சர் முன்வரவேண்டும். பணம் வழங்குவதில் சிரமமெதுவும் இருப்பின் இங்கிருந்து செல்பவர்கள் அங்கு விற்பனை செய்யக் கூடிய பொருட்களையாவது எதுவித கெடுபிடிகளுமின்றிக் கொண்டுசெல்ல அனுமதி வழங்கவேண்டும்.

புத்தொளி

அச்சுவேலி.

## சி. பொ. த.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தது வருந்தத்தக்கதாகும் என்றும் தேசிய அரசுப்பேரவையில் மூன்று நியமன அங்கத்தவர்கள் இடம்பெறக் கூடியதாக அரசியலமைப்பில் மாற்றம் கொண்டுவர வேண்டும் என்றும், பொலிஸ் அதிபர் யதிவாளர் போன்ற உயர் பதவிகளுக்குத் தகுதியான சிறுபான்மைத்தமிழர் சமூகத்தைச்சேர்ந்தவர்களை நியமனஞ் செய்யவேண்டுமென்றும் கௌரவ பிரதம அமைச்சரைக் கோரும் கோரிக்கைகள் இக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டன.

திருவாளர்கள்எம்.எஸ். அலெக்சாண்டர், மாகிலரமணி ஆகியோரை இணைச்செயலாளராகக் கொண்ட நிர்வாகக்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

## குழந்தைகளுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று கட்டங்களாக நடைபெறவிருக்கும் இத்திட்டத்தின் முதற்கட்டம் கொழும்பு, யாழ்ப்பாணம், களுத்துறை பிரிவுகளில் மேற்கொள்ளப்படும். (ம)

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கம்மா குமாரசாமி

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியர் சுந்தரலிங்கத்தின் தாயாரான திருநெல்வேலி தங்கம்மா குமாரசாமி காலமானர். ஈமக்கிரியைகள் கந்தர்மடம் குமாரசாமி வீதி புதிய இல 40 இல் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்று தகனத்துக்கு கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும. 7429

வரதர் வெளியீடு

பெருமையுடன் அளிக்கும்
'நீலவண்ணன்'
எழுதிய
**24 மணி நேரம்**

இனக்கலவரத்தின்போது முக்கியமாக யாழ்ப்பாணத்திலும், தொடர்ந்து நாடுமுழுவதிலும் நடைபெற்ற துயரச்சம்பவங்களை விரிவாக அலசி ஆராயும் நூல்.

**நூல் வெளியீட்டுவிழா**

தலைவர்:
திரு. அ. அமிர்தலிங்கம்
வெளியீட்டுரை:
தோழர் வ. பொன்னம்பலம்
சிறப்புரைகள்:
திரு. சி. கதிரவேலுப்பிள்ளை பா. உ.
திரு. வெ யோகேஸ்வரன் பா உ.
திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்

**17-10-77திங்கள் மாலை 6மணிக்கு
யாழ். வீரசிங்கம் மண்டபத்துக்கு**
தமிழ்மக்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

நூல்: 190பக்கம்—8பக்கம் ஆர்ட்போட்டோக்கள் ரூ. 6-50

**ஆனந்தா புத்தகசாலை**
226, காங்கேசன்துறைவீதி — யாழ்ப்பாணம்.

## நாளும் நடப்பும்

எம். பி. க்கள் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதை விளக்குவதற்காக சமீபத்தில் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

இதைப்போன்று கருத்தரங்குகள் வகுப்புகளை எம். பி. மார்களின் மனைவியருக்கும் நடாத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாம்.

எம். பீ.க்கள் தொகுதிகளில் இல்லாத சமயத்தில் அவர்களுடைய கடமைகளில் பெரும்பாலானவற்றை மனைவியரே கவனிக்கவேண்டியிருக்கிறது. எனவே எம். பி.க்களின் மனைவியர் பொதுமக்களுடன் பண்பாகவும் பொறுப்புடனும் நடந்துகொள்ளாவிட்டால் எம். பி.க்களுக்கே அவப்பெயர் ஏற்படும்.

"ஆவதும் பெண்ணலே அழிவதும் பெண்ணலே'. என்பது தமிழ் முதுமொழி.

எம். பி. யாவதும் அது நிலைத்து நிற்பதும் எம். பி.யின் மனைவியில் தங்கியுள்ளது." இப்படி ஒரு புதுமொழியை ஏற்படுத்தலாமா?

தேர்தல் காலத்தில் வேட்பாளர்களுக்கோ அவர் மனைவியருக்கோ இதுபற்றிச் சொல்லிக்கொடுக்கத் தேவையில்லை. இதனல்தான் எம். பி. யானபின் இத்தகைய கருத்தரங்குகளும் வகுப்புக்களும் ஏற்படுகின்றனபோலும்!

இதேபோல் சில எம். பீ.க்களின் வீடுகளில் 'உதவி செய்வோருக்கும் செயலாளர்கள் மற்றும் தொண்டர்களுக்கும் கூடப் பயிற்சியளித்தால் இந்த எம். பி க்களின் நல்ல பெயரைப் பாதுகாத்துக் கொள்ளலாம்!

0 0 0

நல்லூரில் அமைக்கப்பட்டுள்ள கல்யாணமண்டபத்தை பயன்படுத்துவதற்கான வழிவகைகளில் யாழ் மாநகர விஷேச ஆணையாளர் திரு. க. சிவஞானம் ஆலோசனைசெய்து வருகிறார். அதற்கான சில திட்டங்களையும் செயல்படுத்தவிருக்கிறார்.

கல்யாண மண்டபத்தின் வாடகைக் கட்டணத்தை வெகுவாக அவர் குறைத்திருக்கிறார்.

பொதுமக்களிடமிருந்தும் பயனுள்ள யோசனைகளை அவர் எதிர்பார்க்கிறார்.

0 0 0

சில வாரங்களுக்குமுன் திருச்சி வானெலியில் 'சம்பூர்ணராமாயணம்' நாடகம் மூன்று தினங்கள் இரவில் தொடர்ச்சியாக ஒலிபரப்பப்பட்டது. கவிஞர் எஸ் டி. சுந்தரம் எழுதித் தயாரித்த இந்த நாடகத்தை வானெலியில் கேட்டபோது இதை நேரில் பார்க்க முடியவில்லையே என்ற குறை தோன்றியபோதிலும் நேரில் பார்ப்பது போன்று வானெலி நாடகம் அமைந்திருந்தது.

அந்த நாடகத்தில் இராமனை நடித்த இசைமணி சீர்காழி கோவிந்தராஜனை நாரதர் வேடத்தில் 'தசாவதாரம்' திரைப்படத்தில் பார்த்தேன்.

கே. எஸ். கோபாலகிருஷ்ணன் டைரக்ஷனில் உருவாகியுள்ள 'தசாவதாரம்' சில கட்டங்களில் நாடகபாணியில் அமைந்துள்ளபோதிலும் மிகச் சிறப்பாகப் படமாக்கப்பட்டிருக்கிறது. அருமையானபாடல்கள், அர்த்தமுள்ள வசனங்கள். ஒரு தடவையல்ல பல தடவை பார்க்க வேண்டும் போல் மனதைக் கவர்ந்திழுக்கிறது.

- ஊர்சுற்றி

## நவராத்திரி பஜனை

யாழ்ப்பாணம், திங்கள் நவராத்திரியையொட்டி நல்லூர் இந்து இளைஞர் மன்றத்தினர் நல்லூர்வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் தினமும் மாலை 7 மணிக்கு பஜனை நிகழ்த்திவருகின்றனர்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper i
Sri Lanka